# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE

## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1

**OS.NO.3/2020**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மணிகண்டன் |
| Father/Husband Name | : | திரு.ராமஜெயம் |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.06.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 12.34 P.M

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

சுப்பிரமணி முதலியாரின் வாரிசு சான்றிதழில் என் பெயரும், தாயார் பெயரும் வா.சா.ஆ.33 ல் இல்லை என்றால், சரிதான். இறந்தவர் என் தாத்தா என்பதால் என் தாயார் மருமகள் என்பதால் அவர் பெயரும், பேரனான என் பெயரும் வராது. சுப்பிரமணி, கஸ்தூரி தம்பதியரின் மகன் ராமஜெயம் என்பவரும் என் தகப்பனார் ராமஜெயம் என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்றால், சரியல்ல. திருமண சான்று ஒப்படைத்திருக்கிறேன். அதில் உள்ளது. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ல் ராமஜெயத்தின் தகப்பானர் சுப்பிரமணி என்று உள்ளதா என்றால், இல்லை. தீர்ப்புரையில் கஸ்தூரியம்மாள் மகன் ராமஜெயம் என்று உள்ளது.

நான் என்னுடைய வழக்குரையில் 6 வது அயிட்ட சொத்து குப்பாபாய் வாரிசுதாரர்களும் கஸ்தூரிபாய் வாரிசுதாரர்களும் சேர்ந்து 12, 13 பிரதிவாதிகளுக்கு விற்றது சம்மந்தமாக 10.10.2017 ல் உறவினர்கள் மூலம்

தெரியவந்ததாக சொல்லியிருக்கிறேன், யார் அந்த உறவினர்கள் என்று குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. சொல்லியிருக்கிறேன், என் தாத்தா நடராஜன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். காலவரையரையை நீட்டிப்பதற்காக இது போன்ற விளக்கத்தை கொடுக்கிறேன் என்றால், சரியல்ல. கஸ்தூரிபாய், சுப்பிரமணியின் மகன் ராமஜெயம் என்பது என்னுடைய தகப்பனார் ராமஜெயம் இல்லை என்பதால் தான் ஏற்கெனவே தாக்கல் செய்த OS.149/2017 வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளை தரப்பினாரா சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. என் தகப்பனார் திருமணம் ஆனவர் என்பதால் சகோதரர்களை தரப்பினராக சேர்க்கப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவ்வாறு சொல்வது தவறு என்றும், தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கெனவே பிரச்சனை உள்ள நிலையில் அவர்களை தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால், சரியல்ல.

தவறுதலாக பெறப்பட்ட வாரிசு சான்று அடிப்படையில் என் பெயரையும் தாயார் பெயரையும் பட்டா வா.சா.ஆ–16 ல் சேர்த்திருக்கிறோம் என்றால், சரியல்ல. நானும் முதல் வாதியும் சுப்பிரமணி மற்றும் கஸ்தூரியின் வாரிசுகள் இல்லை என்றும், அதன் அடிப்படையில் வாரிசு உரிமை கோரி தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்றால், சரியல்ல. இந்த வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 12.48 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.